**தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை - 2022**

-----------------------------------------------------------------------------------------------

தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க இலக்க நிதிச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபை சட்டத்தின் 22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(6) ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படவேண்டிய 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இந்த அறிக்கை திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதுகின்ற மீளாய்வாண்டின் சபையின் செயற்படுநிலை தொடர்பான எனது அவதானிப்புக்கள் மாத்திரம் இந்த அறிக்கையில் உள்ளக்கப்பட்டுள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்காக சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2023 யூலை 17 ஆம் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | காணப்பட்ட பிரச்சினையான நிலைமையின் பின்னர் 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டு முடிவடைதற்கு முன்னர் நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்து பூர்த்தி செய்ய முடியுமாக உள்ளதுடன் அதன் பின்னர் நாளாந்த கொடுக்கல் வாங்கல்களை நாளது வரையாக பேணிச்செல்வதற்கு முடியுமென எதிர்பாக்கின்றோம். | நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு தேவையான விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>------------------------ | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 102 முதல் 110 வரையான ஏற்பாடுகள். | தேசிய நூலக ஆவணப்படுத்தல் இருப்பொன்றை ஸ்தாபிப்பதற்கு மார்டின் விக்ரமசிங்ஹ தொகுப்பிற்குரிய 35 புத்தகங்கள் தொலைந்து போனமை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடபடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தொகுப்பை மீள்கட்டமைப்பு நடவடிக்கைகளின் போதும் இந்த காணாமல் போன 35 புத்தகங்களையும் கண்டறிய முடியாதிருக்குமாயின் நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 756, மற்றும் 757 | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 115,032,640 ஆன புத்தக இருப்புக்கள் மற்றும் தேசிய நூலகத்தின் பாதுகாக்கப்பட்ட ஆவணமாக்கல் வளங்கள் மீளாய்வாண்டின் போது மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | தேசிய நூலகத்தில் பாதுகாக்கப்பட்ட ஆவண வளங்கள் 2023 ஆம் ஆண்டிலிருந்து கட்டம் கட்டமாக மெய்மையாய்வு செய்வதற்காக உள்ளகத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய இலக்கம் SC&PMU/Grant/20 வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுபவம் மற்றும் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ளாமல் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 யூலை 15 ஆம் திகதி வரை 03 செயற்றிட்டங்களுக்குரியதாக கூட்டுமொத்தமாக ரூபா 43,596,398 வெளிநாட்டு மானியம் சபையினால் நேரடியாக பெறப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபை ஆலோசனையின் படி Skills Online Sri Lanka செயற்றிட்டம் மற்றும் பொது நூலக தரியங்கும் செயற்றிட்டம் தொடர்பாக முறையே 2021 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அவ்வாறே திரைசேரியின் அங்கீகாரமின்றி கடமைக்காலத்தில் சபையின் நிரந்தர பதவியணியினரை செயற்றிட்ட பணிகளுக்காக ஈடுபடுத்தி மீளாய்வாண்டிக்காகவும் மற்றும் 2023 சனவரி 01 ஆம் திகதி முதல் 2023 யூலை 15 வரை முறையே ரூபா 2,513,960 மற்றும் ரூபா 19,471,740 படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. | மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் அதற்காக எந்தவொரு பதிலும் கிடைத்திருக்கவில்லை. கட்புலனாகா கலாசார மரபுரிமையினை பாதுகாத்தல் என்ற தொலைக்காட்சியில் தற்போதய நிகழ்சித்திட்டம் காணொளி தயாரிக்கும் செயற்றிட்டத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையைப் பெற்று பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (இ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 342 என்ற திறைசேரி சுற்றறிக்கை | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 383,231,027 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்கள் கொள்வனவுகள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடொன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1998 இன் 51 ஆம் இலக்க தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சட்டம்<br>--------------------------- | | | |
| (i) | 12(2) (அ), (ஆ) பிரிவுகள் | (i) நூலக மற்றும் ஆவணமாக்கல் வளங்கள் தொடர்பாக தேசிய இருப்பொன்றில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் 2015 ஆம் ஆண்டின் போது புதிய நூலக தகவல் முகாமைத்துவ முறைமையில் விடயங்களை உள்ளடக்கும் போது 330,228 உள்ளடக்கப்படாதிருந்ததுடன் உள்ளடக்கப்பட்ட விடயங்களிலும் சில தரவுகள் பிழையாக இருந்தமையால் வாசகர்களுக்கு இந்த வளங்களை பரிசீலிக்கும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டுவரை ஆவணமாக்கல் வள விடயங்கள் பத்து இலட்சம் அளவில் காணப்படுவதாக மதிப்பிடப்பட்டு அணுகல் இலக்கம் ஒதுக்கப்பட்ட போதும் சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் பிரகாரம் 503,532 விடயங்கள் ஆக காணப்பட்டது. அவ்வாறு து தீர்மானித்ததன் காரணமாக வாசகர் பதிவேட்டில் இலக்கம் 496,468 மிகை ஏற்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக இந்தப் பணிகளை இடையறாது செய்வதில் பிரச்சினைகள் காணப்பட்டது. 2016 ஆம் அறிமுகப்படுத்தப்பட்ட KOHA நூலக முகாமைத்துவ மென்பொருள் பத்து லட்சத்திலிருந்து ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நூலக மற்றும் ஆவணமாக்கல் வளங்கள் தாடர்பாக தேசிய இருப்பொன்றை முறையாக ஸ்தாபித்து முறையாகவும் செயற்திறனாகவும் பேணிச்செல்லல் வேண்டும். |
| | | (ii) நூலக மற்றும் ஆவணமாக்கல் வளங்கள் தொடர்பாக தேசிய இருப்பொன்றை வழங்குதல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆவணமாக்கல் பொருட்கள் இருப்பொன்றை ஸ்தாபித்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் பேணிச் செல்லுதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பாக சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கின்ற பணிகளை நிறைவேற்றுகின்ற பாதுகாத்தல் மற்றும் மீளமைத்தல், கையகப்படுத்துதல் மற்றும் நூல் விஞ்ஞாபன நிர்வாக பிரிவுகளில் நிறைவேற்றவேண்டியதாக இனங்காணப்பட்ட முறையே 29,579, அலகுகள், 9,210 அலகுகள் மற்றும் 4,743 அலகுகள் கையில் இருந்தன. | பதவியணியினர் பற்றாக்குறை மேற்கூறப்பட்ட ஒட்டுமொத்த பாதுகாப்பும் காலதாமதமடைவதற்கு காரணமாக இருந்தது. | சட்டத்தின் பிரகாரம் சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்களை செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 12(2) (எ) பிரிவு | நூற்களின் பெயர்ப் பட்டியலை வெளியிட வேண்டிய காலப் பகுதி குறித்துரைக்கப்படாதிருந்ததுடன் 2023 யூலை 14 ஆம் திகதி வரையில் 2022 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் நூற்களின் பெயர்வழிப் பட்டியல் வெளியிடப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டில் பிரசுரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நூற்களின் பெயர் பட்டியல் காலப்பகுதி தொடர்பான தகவல்கள் வருடாந்த திட்டத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் மாதம் வரையில் 2023 ஆகஸ்ட் காலப்பகுதி வரை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் கையளிக்கப்பட்டுள்ள பணிப்பொறுப்புக்களை செயற்திறனாக நிறைவேற்றுதல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 மற்றும் 2022 ஆம் அண்டுகளின் போது பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத அச்சிடல் இயந்திரம் ஒன்றை திருத்துவதற்காக ரூபா 49,680 செலுத்தப்பட்டிருந்த போதும் சேவைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இந்த இயந்திரத்தை சேவை செய்யப்படாமையினால் சேவை உடன்படிக்கைக்கு செலுத்தப்பட்ட பணம் உரிய சேவை மேற்கொள்கின்ற நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஆவணமாக்கல் வள இருப்புக்கள் அமைந்துள்ள கட்டிடத்தின் ஒரு பகுதியை வாடகை அடிப்படையில் வெளி நிறுவனம் ஒன்றிற்கு வழங்குவதற்கு கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் 21 ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய நூலக ஆவணமாக்கல் இருப்பின் விலையிட முடியாத மற்றும் மிகவும் நலிவான தாள்கள் உள்ள புத்தகங்கள்/ பழைய/ புதிய ஆவணமாக்கல் வளங்கள் ஏற்பட்டமையால் திடீர் தீ விபத்திற்கு உட்படுமாயின் அதனை தடுப்பதற்கு முடியுமான பொறிமுறை ஒன்றைத் தயாரித்தல், சபையின் | உரிய காப்புறுதி நடவடிக்கைகள் உடன்படிக்கை கைச்சாத்திடலுடன் அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆவணமாக்கல் வளங்கள் இருப்பினை பாதுகாப்பாக பொறுப்புடன் நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்கள் மற்றும் ஊழியர்களுக்கு காப்புறுதி நடவடிக்கைகள் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மாட்டின் விக்கிரமசிங்க தொகுப்பை மீண்டும் ஸ்தாபிப்பதற்காக மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பாடதிருந்ததுடன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக சபையின் தலைவர் மேற்கொண்ட கோரிக்கையின் பிரகாரம் 2022 ஏப்ரல் 08 ஆம் திகதி ரூபா 3,818,805 பெறுமதியான மர தளபாடங்களில் 29 அலகுகள் அரச மர கூட்டுத்தாபனத்திலிருந்து கட்டளையிடப்பட்டிருந்தது. 2022 ஒக்டோபர் 25 ஆம் திகதி அதற்காக ரூபா 02 இலட்சம் முற்பணத் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த தொகை 2023 சனவரி மாதத்தின் போது சபைக்கு கிடைத்திருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது இதற்காக சபையின் நிதி ஏற்பாடு ஒதுக்கப்படவில்லை. எனினும் அரச நிறுவமொன்றாக இருந்தமையால் நிதி ஏற்பாடின்றிய நிலைமையொன்றாக இருந்த போதிலும் அரச மரக் கூட்டுத்தாபனத்திலிருந்து இந்தப் பொருட்கள் விண்ணப்பிக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்காக நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் உரிய பூர்த்திப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பிரதான கட்டிடத்தை நவீனமயப்படுத்துதல் 2018 சனவரி 09 ஆந் திகதி முதல் 24 மாதங்களில் பூர்த்தி செய்வதற்காக ரூபா 211,937,795 ஆன வரியின்றிய ஒப்பந்தத் தொகையில் கல்வி அமைச்சு ஒப்பந்தக் கம்பனியொன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு வரையில் கம்பனிக்கு ரூபா 252,463,612 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 03 சந்தர்ப்பங்களின் போது ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்ட போதிலும் 2021 மார்ச் மாதத்தின் போது ஒப்பந்தம் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. இலக்கம் 15-02-07 என்ற 2021 சனவரி 05 ஆம் திகதிய தலைவரின் கடிதத்தில் 18 பிரதான விடயங்கள் மற்றும் தரை மாடியிலிருந்து நான்காவது மாடி வரை பூரணமாக்காமை | நிதி ஏற்பாடு இல்லாமையின் காரணமாக நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது தேவையான நிதி ஏற்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மிகுதி நடவடிக்கைகள் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்ட போதும் தற்போது அந்த நிறுவனம் மீள்கட்டமைப்பதற்கு | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மற்றும் குறித்துரைத்த பிரகாரம் பூர்த்தி செய்யப்படாத ஒப்பந்தப் பணிகள் இனங்காணப்பட்டிருந்த போதும் 2023 யூலை 17 ஆம் திகதி வரையிலும் அந்தக் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | தீர்மானிக்கப்பட்டமையால் சந்தையில் கூறுவிலை கோருதல் ஊடாக பொருத்தமான தரப்பினரை தெரிவு செய்யுமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பிரிவுகளுக்குரிய உப முறைமைகளை உள்ளடக்கிய 10 பிரதான கணனி மென்பொருள் முறைமை பயன்படுத்துனர் பெயர் (User name) மற்றும் நுழைவுக் குறியீடு (Password) 2020 பெப்ரவரி 13 ஆம் திகதி காப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் அத் திகதியின் பின்னர் 39 மாதங்கள் கடந்திருந்த போதிலும் பயன்படுத்துனர் பெயர் (User name) மற்றும் நுழைவுக் குறியீடு (Password) என்பவற்றை நாளதுவரையாக்கும் வகையில் காப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | தகவல் தொழில்நுட்பப் பிரிவில் காப்பகத்தில் சபையின் கணனித் தகவல் முறைமைகளில் பயன்படுத்துனர்களின் பெயர் மற்றும் நுழைவுக் குறியீடு என்பன நாளதுவரையாக்குவதற்கும், அதன் இரட்டை நுழைவு பணிப்பாளர் நாயகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்ற உத்தியோகத்தர்களினால் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஒரு உத்தியோகத்தரின் பொறுப்பில் சபையின் பயன்படுத்துநர் பெயர் (User name) மற்றும் நுழைவுக் குறியீடு (Password) காணப்படுகின்ற ஆபத்தைக் குறைக்கும் வகையில் நாளதுவரையாக காப்பகத்தில் வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தேசிய நூலக ஆவணமாக்கல் வளங்கள் இருப்பைப் பாதுகாப்பதற்காக ஈரப்பதனை சரியாக பேணிச்செல்வதற்கு ஸ்தாபிக்கப்பட்ட வளிப்பதனாக்கி முறைமை 24 மணித்தியாலம் முழுவதும் தொடச்சியாக செயற்பட வேண்டியிருந்த போதும் மின்சாரக் கட்டணம் அதிகரித்தமையால் வார நாட்களில் 17 மணித்தியாலங்களும், வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களில் 24 மணித்தியாலமும் வளிப்பதனாக்கி முறைமையை செயற்படுத்தியமையால் ஆவணமாக்கல் வளங்கள் இருப்பின் பாதுகாப்புப் பணிகளை உச்ச அளவில் | மின்சாரக் கட்டணம் உயர்வடைந்து சென்றமையினால் தற்போது வளிப்பதனாக்கி முறைமை கடமை நேரத்தின் போது மாத்திரம் அமுல்படுத்தப்படுகின்றது. அதனால் 24 மணித்தியாலமும் வளிப்பதனாக்கி முறைமையை அமுல்படுத்தும் போது செலவாகின்ற மின்சாரப் பட்டியலை செலுத்துவதற்கு தேவையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்படல் வேண்டும். | ஆவணமாக்கல் வளங்கள் இருப்பின் பாதுகாப்புப் பணிகளை உச்ச அளவில் பேணிச் செல்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேணிச் செல்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | பாதுகாப்பு மற்றும் மீளமைப்பு பிரிவின் கீழ் காணப்பட்ட கிரயம் ரூபா 3,660,547 ஆன உபகரணங்களுடன் ஆய்வுகூடம் ஸ்தாபிக்கப்பட்ட இடத்திலிருந்து அகற்றப்பட்டமையால் அதன் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு முதல் 2023 யூலை 18 ஆம் திகதி வரையும் நிறுத்தப்பட்டிருந்தது. 05 வருட காலத்திற்காக ஆய்வுகூடங்களில் நிறைவேற்றப்படுகின்ற உக்கும் புத்தகங்களை மீளமைக்கும் (tissue) நடவடிக்கைகள் போதியளவான பிரகாரம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டிலிருந்து பிரிவில் சேவையாற்றுகின்ற ஆவண காப்பாளரினால் தேவையான சில உபகரணங்கள் களஞ்சியத்திற்கு கொண்டுவந்து இரசாயன பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றது. தற்போது தற்காலிகமாக முதலாவது மாடியில் காணப்பட்ட Temperature Humidity Control Unit மற்றும் Leaf Casting Machine உபகரணங்கள் புத்தக களஞ்சியங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. இந்த உபகரணங்களின் பராமரிப்புப் பிரிவினை சேவை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | புத்தக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஆய்வுகூடங்கள் தேவையாக இருந்தமையால் ஆய்வுகூடங்களின் நடவடிக்கைகளை நிறைவேற்றும் வகையில் முறையான வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) | உரியவாறு தயாரிக்கப்பட்ட எதிர்காலத் திட்டத்தின் பிரகாரம் ஆவணமாக்கல் வளங்கள் துறைரீதியில் நாளாந்தம் பரீட்சிக்கும் போது பயன்பாட்டு இலக்கத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட ஆவணமாக்கல் வளங்களுக்காக ஈடுபடுத்தவேண்டிய சிகிச்சைத் திட்டமொன்று (Treatment Pant) தயாரித்து அந்தத் திட்டத்தின் பிரகாரம் ஆவணமாக்கல் வளங்களுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற பாதுகாப்பு மற்றும் மீளமைத்தல் சிகிச்சை (Diagnosis card) தொடர்பான தரவுகள் பயன்பாட்டு இலக்கத்தின் பிரகாரம் கணனி தகவல் பதிவேட்டில் உள்ளடக்கி பாதுகாப்பு மற்றும் மீளமைத்தல் சிகிச்சைகளை போதியளவாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பு சிகிச்சை மற்றும் கட்டுகின்ற நடவடிக்கைகள் போதியளவான பதவியணியினர் இல்லாமையினால் முன்னுரிமை மற்றும் தெரிவு செய்யப்பட்ட தொகுப்புகள் மாத்திரம் பாதுகாக்கப்படுகின்றது. எனினும் உரிய தரவுகள் கணனி முறைமைக்குள் உள்ளடக்கப்படவில்லை. இந்த விடயங்கள் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு தரவு அடிப்படையொன்றை ஸ்தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | ஆவணமாக்கல் வளங்கள் சிகிச்சைத் திட்டத்திற்கு (Treatment Pant) இன் பிரகாரம் ஆவணமாக்கல் வளங்களுக்காக ஈடுபடுத்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் மீளமைத்தல் தீர்வு தொடர்பாக (Diagnosis card) தரவு பயன்பாட்டு இலக்கத்தின் பிரகாரம் கணனி தகவல்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு பாதுகாத்தல் மற்றும் மீளமைத்தல் செயல் முன்னேற்றங்களை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |